

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | பிப்ரவரி 23, 2023 | புரட்சி 22 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00


## சேலத்தில் ஏப்ரல் 29, 30 தேதிகளில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்துகிறது

# “இது தமிழ்நாடு; இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு”

திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு பிப்.15, 2023 பகல் 11 மணியளவில் சென்னை தலைமை அலுவலகத்தில் கூடியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், தலைமைக் குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், ஆசிரியர் சிவகாமி, சென்னை உமாபதி, விழுப்புரம் அய்யனார், பரிமளராசன், காவலாண்டியூர் ஈசுவரன், மயிலாடுதுறை இளையராசா ஆகியோர் பங்கேற்றனர்.

ஏப்ரல் 29, 30 தேதிகளில் சேலத்தில் கழகத்தின் மாநில மாநாடு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு அது குறித்து நிகழ்ச்சிகள், தலைப்புகள், மாநாட்டு நோக்கங்கள், மாநாட்டுக்கான பேச்சாளர்கள், மாநாட்டுக்கு நன்கொடை திரட்டும் வழிமுறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. “இது தமிழ்நாடு; இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாடு” என்று மாநாட்டின் தலைப்பு முடிவு செய்யப்பட்டது. மாநாட்டை இளம் பெண்கள், ஆண்கள் ஏராளமாகப் பங்கேற்கும் இளைஞர்கள் மாநாடாக நடத்த முடிவு செய்யப்பட்டது.

இளைய தலைமுறையினரை சனாதன பார்ப்பன சக்திகளுக்கு எதிராக அணி திரட்டுவதே நோக்கம் என்று நோக்கம் வரையறை செய்யப்பட்டது. ‘கருப்பு-சிவப்பு-நீலம்’ என்ற மூன்று சனாதன எதிர்ப்பு சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவது என்றும் நாட்டில் தலைதூக்கி நிற்கும் மதவாத ஜாதிய ஒற்றையாட்சி ஆபத்துகளை விரிவாக விளக்கும் கருத்துகளை மாநாட்டில் முன் வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா சேர்ப்பு, மாநாட்டையொட்டி மாவட்டம் தோறும் நிதி திரட்டுதல், தோழர்களுடன் கழகப் பொறுப்பாளர்கள் சந்தித்தல் பற்றியும் விவாதிக்கப்பட்டன.

இயக்க வரலாறு, திராவிடர் விடுதலைக் கழகம் கடந்து வந்த பாதைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சி, பெண்களுக்கான சிறப்பு அரங்குகள், வலை ஒளி (யூடியூப்) நடத்தும் தோழர்கள் கருத்தரங்கம், கழகக் குடும்பக் குழந்தைகள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளை மாநாடுகளில் இடம் பெறச் செய்ய முடிவெடுக்கப்பட்டது. தலைமைக் கழக அலுவலகத்தில் உடனடியாக மேற் கொள்ளப்பட வேண்டிய கட்டிட சீரமைப்புப் பணிகளை தலைமை நிலைய செயலாளர் தபசி. குமரனும், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ நிதிநிலைக் குறித்து விடுதலை இராசேந்திர னும் தலைமைக் குழுவில் விளக்கினர்.

சுவரெழுத்துப் பணிகளை தமிழ்நாடு முழுவதும் தொடங்கவும் மாநாட்டு நோக்கம் நிகழ்வுகளை சித்தரிக்கும் முன்னறிவிப்பு குறும் படங்களை தயாரிக்கவும், மாநாட்டுக்கான சின்னம் (Logo) உருவாக்கவும் ஆலோசிக் கப்பட்டது. மதிய உணவுக்குப் பிறகும் மாலை 5 மணி வரை தலைமைக் குழு விவாதம் நடந்தது. மாநில மாநாடு நோக்கம் குறித்து தோழர்களிடம் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**– நமது செய்தியாளர்**

# சிவராத்திரி: அறிவியலுக்கு எதிரான மூட நம்பிக்கை

சிவராத்திரி விழா நாடு முழுவதும் கோலாகலமாக கொண் டாடப்படுகிறது, இது மக்கள் பக்தியின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை; அந்த நம்பிக்கையில் நாம் குறுக்கிடுவதற்குத் தயாராக இல்லை. ஆனாலும் சிவராத்திரி ஏன் கொண்டாடப்படுகிறது என்பது குறித்த விளக்கங்கள் மக்களிடம் தரப்படுவதில்லை. இதுகுறித்து பல புராணக் கதைகள் கூறப்படு கின்றன.

ஒரு கதை, பாற்கடலை தேவர்கள் வாசுகி என்ற விஷம் நிறைந்த பாம்பைக் கயிராகக் கொண்டு கடைந்தார்கள். அப்போது தேவர்கள் கடைந்த விஷம் கடலில் கலந்தது. இதனால் முழு உலகமும் அழிந்து விடுமோ என்ற அச்சத்தில் தேவர்கள் சிவபெருமானிடம் உதவி கேட்கிறார்கள். சிவ பெருமான் ஓடி வந்து அந்த விஷத்தைத் தானே குடித்தார். ஆனால் அந்த விஷத்தைத் தொண்டையில் வைத்துக் கொண்டார். வயிற்றுக்குள் அனுப்பவில்லை. இது நடைபெற்ற காலம் சிவராத்திரி இரவு. அந்த நாள் தான் சிவராத்திரியாக கொண் டாடப்படுகிறது.

இது ஒரு கதை. மற்றொரு கதை பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் யார் பெரியவர் என்ற சண்டை நடக்கிறது. சிவபெருமானிடம் பஞ்சாயத்து வருகிறது. சிவபெருமான் ஒரு நிபந்தனை விதிக்கிறார். தன்னுடைய தலையையும் பாதத்தையும் யார் பார்க்கிறார்களோ அவர்கள்தான் உயர்ந்தவர்கள் என்று ஒரு போட்டியை வைக்கிறார்.

விஷ்ணு காலடியைப் பார்ப்பதற்காக பூமியைக் குடைந்து கொண்டு உள்ளே போகிறார். பிரம்மா சிவனின் தலை உச்சியை பார்ப்பதற்காக விண்ணை நோக்கிப் போகிறார். இருவராலும் இரண்டையும் காண முடியவில்லை. பிரம்மா உச்சியில் இருந்து கீழே விழும் தாழம்பூ ஒன்றைச் சந்திக்கிறார். அந்த தாழம்பூ சிவபெருமான் தலையிலிருந்து வருகிறேன் என்று கூறுகிறது. அந்தத் தாழம்பூவிடம் பிரம்மா ஒரு வேண்டுகோளை வைக்கிறார். நான் சிவபெருமானின் உச்சியைப் பார்த்து விட்டேன் என்று உன்னால் சிவனிடம் பொய் கூற முடியுமா என்று கேட்கிறார். தாழம்பூ அதற்கு ஒப்புக் கொள்கிறது. அதேபோல் சிவபெருமானிடம் கூறுகிறது. சிவபெருமான் தாழம்பூ பொய் கூறுவதை அறிந்து, ஜோதியாக இருந்தவர் அக்னியாக நெருப்பாக மாறி விடுகிறார்.

இதனால் உலகத்திற்கு ஆபத்து வந்துவிடும் என்று அஞ்சி எட்டுத் திக்குப் பாலகர்களும் அக்னி வடிவத்தில் இருந்து மாறிவிடுங்கள், உலகத்தைக் காப்பாற்றுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று சிவபெருமான் மலையாக மாறி மலையின் உச்சியில் ஜோதியாகத் தெரிந்தார். அந்த நாள் தான் மகா சிவராத்திரி. இன்று மற்றொரு புராணக் கதை கூறுகிறது.

சிவன் பார்வதி மணந்த நாள் தான் மற்றொரு புராணக் கதை கூறுகிறது.

இன்னொரு புராணக் கதை, வில்வ இலைக்கும் சிவராத்திரிக்கும் என்ன தொடர்பு என்று கூறுகிறது.

ஒரு காட்டில் வேட்டைக்காரன் பறவைகளை வேட்டையாடுகிறான். சிங்கம் ஒன்று அவனைத் துரத்து கிறது. ஓடிப் போய் பயந்து அவன் வில்வ மரத்தில் ஏறிக் கொள்கிறான். மரத்தின் அடியில் அவன் எப்போது இறங்குவான் என்று சிங்கம் காத்துக் கொண்டிருக்கிறது.

இரவு தூங்கி விட்டால் விழுந்து விடுவோம் என்ற அச்சத்தில் உறங்காமல் மரத்தில் இருக்கின்ற ஒவ்வொரு வில்வ இலையையும் வேட்டைக்காரன் பிச்சு கீழே போட்டுக் கொண்டே இருக்கிறான்.

மரத்தின் அடியில் சிவலிங்கம் ஒன்று இருக்கிறது. அந்த சிவலிங்கத்தின் தலையில் வில்வ இலைகள் விழுகின்றன. ஆனால் சிவலிங்கம் இதைப் பொறுத்துக் கொண்டு பக்தனை மெச்சுகிறது. அந்த நாள் தான் சிவராத்திரி என்று மற்றொரு புராணக் கதை கூறுகிறது.

ஒரு சிவராத்திரிக்கு இத்தனை கதைகள்.

இந்து புராணங்கள் கூறிக் கொண்டிருக்கிறவை நம்பக் கூடியவை யாக இருக்கின்றதா இல்லையா என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஆனால் அறிவியல் மனப் பான்மையை வளர்க்க வேண்டும் என்று நமது அரசியல் அமைப்பு வலியுறுத்துகிற குடி மக்களுக்கான

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## பிரபாகரன்?

தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று உலகத் தமிழர்களின் பிரதிநிதி என்ற நிலையில் தன்னை நிறுத்திக்கொண்டு பழ. நெடுமாறன் அவர்கள் அறிவித்திருப்பது கடும் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. பழ. நெடுமாறன் அவர்கள் இதை அறிவித்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ்நாட்டில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் களமாடிய முன்னோடி தலைவர்கள் எவரும் அவருடன் இல்லை. இந்த அறிவிப்பிலிருந்து அவர்கள் விலகி நிற்க முடிவு செய்துவிட்டனர்.

அவ்வப்போது பிரபாகரன் உயிருடன் இருப்பதாகக் கூறி வந்த பழ. நெடுமாறன் அவர்கள், அண்மைக்காலமாக இதில் அமைதி காத்து வந்த நிலையில், இப்போது இதை அறிவிக்க வேண்டிய தேவை – அவசியம் ஏன் வந்தது? மோடி தலைமையிலான ஒன்றிய ஆட்சி, ஈழத் தமிழர்களுக்கு 13ஆவது சட்டத் திருத்தத்தின்படி உரிமைகளை வழங்க வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தி வருகிறது. இந்த முயற்சியை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான சர்வதேச சூழல் என்று கருதும் பழ. நெடுமாறன், அதைச் சாக்கிட்டு பிரபாகரன் வெளியில் வர முடிவு செய்துள்ளார் என்கிறார்.

13ஆவது சட்டத் திருத்தம் என்ற போலி அதிகாரப் பரவுதலை உறுதியாக எதிர்த்தவர் பிரபாகரன். அவர் போராடியது தமிழ் ஈழத்தின் விடுதலைக்காகத்தான். அதற்கான மாற்று சிங்கள அரசால் முன்வைக்கப்படுமானால் பரிசீலிக்கத் தயார் என்றும் அவர் கூறினார்.

சிங்கள அரசு மவுனம் சாதித்தது; உடனே சர்வதேச சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து, ஈழ விடுதலைக்கு மாற்றாக ஒரு அரசியல் திட்டத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்த போது, அதை நிராகரித்தது சிங்கள அரசு என்பது கடந்த கால வரலாறு.

இந்தப் பின்னணியில் 13ஆவது சட்டத்திருத்தம் என்ற ஏமாற்றுத் திட்டத்தை தமிழர்களுக்கான தீர்வாகக் கருதி பிரபாகரன் வெளியில் வரப்போகிறார் என்ற வாதம், அந்த தன்னிகரற்ற விடுதலைப் போராளியை அவமதிப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது.

வேறு மொழியில் சொல்ல வேண்டுமானால் ஒன்றிய பாஜக ஆட்சியின் ஈழத்தமிழர் ஆதரவு நிலையை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு பிரபாகரன் வரவேற்க தயாராகிவிட்டார் என்பதையே பழ. நெடுமாறன் அவர்களின் இந்தக் கருத்துகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. எனவே தான் ஒன்றிய பாஜகவுக்கு பெருமையையும் வலிமையையும் சேர்க்கும் நோக்கத்துடனேயே இந்த அறிவிப்பு வெளி வந்திருக்கிறது என்ற முடிவுக்கு நாம் வர வேண்டியிருக்கிறது.

பெரியார் திராவிடர் கழகமாக இருந்த காலத்திலும் திராவிடர் விடுதலைக் கழகமாக இருக்கும் போதும் தமிழீழ விடுதலைப் பிரச்சினையைத் தூக்கி சுமந்து அதற்காக கடும் விலையைக் கொடுத்தது நமது இயக்கம். கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி அடக்குமுறை ஆள் தூக்கி சட்டங்களின் கீழ் மாதக்கணக்கில் சிறைப்பட்டிருந்தார். தோழர்கள் பலரும் இதேபோல் அடக்குமுறைகளைச் சந்தித்து இப்போதும் நீதிமன்றத்தால் வழக்குகளுக்காக அலைக்கழிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே இப்பிரச்சனையில் துணிவோடு நேர்மையாக கருத்துக்களை முன்வைக்கும் தார்மீக உரிமை நமக்கு இருக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் ஒரு மாபெரும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தினாலும் அவரைத் தனிமனிதராகப் பார்க்க முடியாது; அது ஒரு வீரம் செறிந்த தலைமைத்துவம். 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்குப் பிறகு 14 ஆண்டுகளாக அவர் வெளிப்படவில்லை. இதன் மூலம் பிரபாகரன் – உடலால் உயிருடன் இருக்கிறார் என்று ஏற்றுக் கொண்டாலும்கூட அவரே தனது தலைமைத்துவம் தற்போது களத்தில் தேவை இல்லை என்பதை வெளிப்படுத்தவே விரும்புகிறார் என்ற முடிவுக்குத் தான் நாம் வரவேண்டும். தனது இருப்பு இல்லை என்பதே அவர் வெளிப்படுத்தும் சேதி. இருப்பை உறுதி செய்ய நினைத்தால் பிரபாகரன் அவர்களே நேரில் தோன்றி அறிவிப்பார். இந்த 'மவுனத்தை'த் தகர்க்க பழ. நெடுமாறன் போன்ற மூத்த தலைவர்கள் ஏன் துடிக்க வேண்டும் என்பதே நமது கேள்வி!

மட்டுமின்றி பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பது ஒரு சர்வதேசப் பிரச்சனை. ஏதோ தஞ்சையில் முள்ளிவாய்க்கால் முற்றம் மட்டும் இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

ஒரு மாபெரும் விடுதலைப் போராட்டத் தலைவரை சந்தர்ப்பவாத அரசியலுக்கான பகடைக்காய்களாக மாற்றுவதை நாம் ஒருபோதும் ஏற்க இயலாது. தமிழ் ஈழப் பிரச்சனைக்காக தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தலைவர் பழ. நெடுமாறன் என்ற முறையில் நாம் எப்போதும் அவரை மதிக்கிறோம். அவருடன் இணைந்து களமாடியவர்கள் என்ற உரிமையோடு எதிர்ப்பைப் பதிவு செய்து இந்த வேண்டுகோளையும் முன் வைக்கிறோம்.

# வெளிப்படையான நிர்வாகம் என்பது...

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்து 20 மாதங்கள் தான் முடிந்திருக்கிறது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் இருக்கப் போகிறது.

ஆனால் தேர்தல் வாக்குறுதிகளில் அறிவிக்கப்பட்டதை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை என்று எடப்பாடி பழனிச்சாமி போன்றவர்கள் பொறுப்பில்லாமல் மேடையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 20 மாத கால ஆட்சி திமுக அறிவித்த திட்டங்கள் எந்தளவுக்கு செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன என்பது குறித்து கள ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்.

மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து அதிகாரிகளை சந்தித்து இந்த திட்டங்கள் மக்களை சென்றடைந்ததுள்ளனவா? என்பது பற்றி எல்லாம் ஆய்வு செய்து இந்த ஆண்டு இறுதிக்குள் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று செயல்பட்டு வருகிறார்.

வெளிப்படையான நிர்வாகம் என்பது இதுவரை பேசப்பட்டுத்தான் வந்தது. ஆனால் அத்தகைய நிர்வாகம் என்ன என்பது பற்றி மக்களுக்குத் தெரியாது. இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் நாம் நேரடியாக பார்க்க முடிகிறது.

இது தவிர தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதி எம்எல்ஏக்களுக்கும் கடிதம் எழுதி உங்கள் தொகுதியில் நிறைவேற்றப்படாத முன்னுரிமை பெறக்கூடிய திட்டங்கள் எவை என்று கேட்டுள்ளார்.

அந்தத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு அடுத்த இலக்கை நோக்கி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இது தவிர மாநிலத் திட்டக் குழு அவ்வப்போது அரசின் செயல்பாடுகளை ஆராய்ந்து அரசிடம் அறிக்கைகளை வழங்கிக் கொண்டு வருகிறது.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம், இல்லம் தேடிக் கல்வித் திட்டம் போன்றவை குறித்த நிறை குறைகளை ஆராய்ந்து முதல்வரிடம் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

கடந்த கால ஆட்சியில் இதுபோன்ற நடவடிக்கைகள் எல்லாம் பார்க்க முடியாத ஒன்று. தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த ஜெயலலிதா 110 விதியின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட திட்டங்களை அறிவித்து செயல்படுத்தாது அறிவிப்புகளோடு முடங்கிப் போயின.

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் போது புதிய திட்டங்களை அறிவிப்பார்கள். அடுத்த ஆண்டு அத்திட்டங்களின் நிலை என்ன? அது நிறைவேற்றப்பட்டதா? நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டதா? எப்படி எந்த ஒரு நடவடிக்கையும் கடந்த ஆட்சியில் நடைபெற்றது இல்லை.

ஆனால் அதற்கு மாறாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயலாக்கம் பெறுகின்றனவா? செயல் வடிவம் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதா? என்பதை பற்றி எல்லாம் மதிப்பீடு செய்து அதை முடித்து விடுவதற்கான transparent governance இப்போது தான் நடந்து கொண்டிருக்கிறது.

# சென்னைக் கூட்டத்தில் பால். பிரபாகரன் உரை

# ஆஷ்துரையை வாஞ்சி சுட்டது ஏன்?

*பிப்.6, 2023 அன்று மயிலைப் பகுதியில் கழகம் நடத்திய காந்தி படுகொலைக் கண்டன நாள் பொதுக் கூட்டத்தில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் நிகழ்த்திய உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

கல்புர்கி, கவுரி லங்கேசு இவர்களைக் கொன்ற துப்பாக்கியில் ஒரே ஒரு துப்பாக்கி. அது ஒரே வகை தோட்டா என்று இப்போது அறிக்கையிலே வெளி வந்திருக்கிறது. அவர்களைப் பிடித்து விசாரித்தால் அனைவரும் சொல்கிறார்கள் அமைப்பு ஒண்ணு இருக்குதுன்றான் என்னடா அமைப்பு? அப்படீன்னு கேட்டா, சனாதன, சன்ஸ்தா என்கிற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று.

அவர்கள் சாஸ்திர தர்மம் என்று புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்த புத்தகத்தைப் படித்ததற்குப் பிறகு படித்தவன் யாரெல்லாம் இந்த சனாதன் தர்மத்தை எதிர்க்கிறார்களோ அவர்களை தீர்த்துக் கட்டுவதே அவர்களின் நோக்கமாக இருக்கும். ஏதோ சுதந்திரத்திற்குப் பின்பு தான் இந்த கொலை நடந்திருக்கிறது என்று நீங்கள் தயவு செய்து நினைக்க வேண்டும்.

சனாதனத்தைக் காப்பாற்றுவதற்காக கொலை. இந்தியர்களை மட்டுமல்ல பிரிட்டிஷார் மீதும் நடத்தியிருக்கிறார்கள்.

1912-இல் திருநெல்வேலியில் கலெக்டராக இருந்த ஆஷ் துரையை அங்கே இருக்கிற வாஞ்சிநாதன் என்ற குடுமி வைத்த பார்ப்பான் சுட்டுக் கொன்றான் எதற்காக கொன்றான்?

மணியாச்சி என்கிற ரயில்வே சந்திப்பிலே ரயிலுக்காக காத்திருக்கிறார். ஆஷ் துரை குடும்பத்துடன் கொடைக்கானல் செல்வதற்காக அந்த ரயிலில் அருக்கில் இருந்த செங்கோட்டையைச் சேர்ந்த குடுமி வைத்த பார்ப்பான் ஆஷ் துரையை நோக்கி சுட்டு விட்டு அங்கே இருக்கிற கழிவறையை நோக்கி ஓடி தன் தலையிலே சுட்டு இறந்து போகிறான்.

ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தான் அந்த கடிதத்திலேயே எதற்காக நான் கொலை செய்தேன் என்று விரிவாக எழுதி வைத்திருக்கிறான்.

அவன் சொல்லுகிறான், ‘இந்த ஆங்கிலேய சத்ருக்கள், இந்து சனாதன தர்மத்தை அழிக்கும் பொருட்டு அவர் பல்வேறு வேலைகளை செய்கிறார்கள்’ என்று எழுதி வைத்திருந்தான்.

இந்த நாட்டை இராமன் ஆண்டான், அர்ஜுனன் ஆண்டான், கிருஷ்ணர் ஆண்டான், கோவிந்தன் ஆண்டான், தர்மப்படி, சுதந்திரப்படி, இந்த சனாதன தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது, இந்த சனாதன தர்மத்தை கேவலம் கோ மாமிசம் தின்கிற இந்த பஞ்சமன் ஜார்ஜ், இந்து சனாதன தர்மத்தைகாலில் போட்டு மிதிக்கிறான். சனாதன தர்மத்தை அந்த ஜார்ஜ் என்கிற அந்த பஞ்சமன் இந்தியாவிலே கால் வைக்கிற போது, அவனைக் கொலை செய்வதற்காக, மூவாயிரம் மதராசிகளை நாங்கள் தயாராக வைத்திருக்கிறோம்..

அவர்களில் கடைக்கோடியாக இருக்கக் கூடிய அந்த வாஞ்சி நாதன் என்கிற வாஞ்சி அய்யர் அவன் கடிதத்திலே எழுதி வைத்திருக்கிறான். இன்னும் ஆவணக் காப்பகத்தில் இருக்கிறது. பேராசிரியர் ஆ. சுப்பிரமணியன் என்கிற ஒரு வரலாற்று பேராசிரியர் அனைத்திலும் அதைப் பதிவு செய்திருக்கிறார்.

ஏன் ஆஷ் துரையை கொலை செய்தான்?



அவன் ஆஷ்துரையை கொலை செய்தவனுடைய நோக்கம் என்ன?

நாமெல்லாம், குற்றாலத்துக்கு போகிறோம். இந்த குற்றாலத்தில் இப்போது எல்லோருமே குளிக்கிறோம். மக்கள் அனைவரும் இந்த இடத்திலே குளிப்பதற்கு உண்டான உரிமை இருக்கிறது.

பார்ப்பனர்கள் கோலோச்சிக் கொண்டிருந்த நேரத்தில், குற்றாலத்தில் உழைக்கும் மக்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த அருவியில் குளிப்பதற்கு அனுமதி கிடையாது.

ஆஷ் துரை வந்து பார்த்தார், ஏன்டா, மேல இருந்து தண்ணீர் வருகிறது, அந்த குழந்தை குளிக்கும்போது, இந்த குழந்தை ஏன்டா குளிக்கக்கூடாது என்று சொல்லிட்டு, அனைவரும் குளிக்கலாம் என்று அருவியில் குளிப்பதற்கு அவர் ஆணையிட்டார் அதனால்தான் வாஞ்சிக்கு அவ்வளவு கோபம் வருகிறது.

அதுமட்டுமல்லாமல் அங்கு இருக்கக் கூடிய செங்கோட்டை என்ற நகரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு கர்ப்பிணிப் பெண் அவர் நிறைமாத

- *தபோல்கர், கல்புர்கி, கவுரி போன்றவர்களை சுட்டுக் கொலை செய்தது ‘சனாதன் சாஸ்தா’ என்ற பார்ப்பன பயங்கரவாத அமைப்பு.*
- *அந்த அமைப்பை இதுவரை ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி தடை செய்யவில்லை.*

கர்ப்பிணியாக இருக்கிறார், பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருக்கும் போது ஆஷ் துரை வண்டியில் வருகிறார், அந்தப் பெண்ணை ஒரு சாதாரண கட்டை வண்டியில் ஏற்றுகிறார்கள்.

எங்கே கொண்டு செல்வதற்கு, மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு. அங்கே கொண்டு செல்வதற்கு கட்டை வண்டியில் ஏற்றும் போது, ஊரைச் சுற்றித்தான் கொண்டு செல்ல வேண்டும்,

ஆனால் குறுக்கே போனால் அரைக் கிலோ மீட்டரில் சென்று விடலாம். ஆனால் சுற்றிப் போனால் ஐந்து கிலோமீட்டர் செல்ல வேண்டும். ஆனால் கட்டை வண்டியில் கொண்டு போனால் எவ்வளவு நேரம் ஆகும்.

அந்தப் பெண் எவ்வளவு கஷ்டப்படுவார் என்பதை உணர்ந்த ஆஷ் துரையின் மனைவி தன் கணவனிடத்திலே சொன்னார், ஒரு பெண் அங்கே வலியால் துடித்துக் கொண்டிருக்கிறாள் அதைப் பார்த்துவிட்டு நாம் எப்படிச் செல்வது என்று கூறி அவர்களது காரில் ஏற்றிக் கொண்டு அக்கிரகாரத்து வழியாக மருத்துவமனையில் சேர்த்தனர்.

ஒரு தாழ்த்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணை அக்ரஹாரத்து வழியாக மருத்துவமனைக்கு கொண்டுப் போய்ச் சேர்த்தார் என்ற மாபெரும் குற்றத்திற்காகத் தான் ஆஷ் துரையை வாஞ்சி அய்யர் என்கிற பார்ப்பான் சுட்டுக் கொன்றான்.

அவர்களுக்கு வருணாசிரம தர்மம் என்பது காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான்.

அந்த வர்ணாசிரம தர்மத்தைத் தான் இப்போது ஆளுநர் பேசிக் கொண்டிருக்கிறார். அந்த வர்ணாசிரம தர்மத்தைத் தான் இங்கு இருக்கிற அர்ஜுன் சம்பத் மாதிரியான அல்லக்கைகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு தெரியாது, ஏனென்றால் சங்கராச்சாரியிடம் சமமாக நின்று பேசும் தகுதிகூட அர்ஜுனன் சம்பத்திற்கு இல்லை என்ற அடிப்படை அறிவுகூட அவருக்குக் கிடையாது.

ஆனால் அவர்தான் சனாதன தர்மம் சிறந்த தர்மம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் சனாதனத்தை வலியுறுத்திப் பேசுகிற போக்கை ஆளுநர் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஒரு ஆளுநர் ஒரு ஆட்சி தலைவராக இல்லாமல் ஆட்சியைக் கட்டுப்படுத்தக் கூடிய, ஆட்சியை கொண்டு செல்லக்கூடிய தலைவராக இல்லாமல் அரசியல் கட்சியின் தலைவராக சனாதன தர்மத்தை வலியுறுத்தி பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்.

எனக்கு என்ன சந்தேகம் என்றால் அவர் ஆளுநராக இல்லாமல் பிஜேபியின் மறைமுக தலைவராகத்தான் பார்க்க தோன்றுகிறது.

அவர் மசோதாக்களுக்கு கையெழுத்திடாமல் கிடப்பிலே வைத்திருக்கிறார், தமிழ்நாட்டின் உரிமைகளை வலியுறுத்தும் எத்தனையோ மசோதாக்களை கையெழுத்திடாமல் கிடப்பில் போட்டுள்ளார்.

ஆன்லைன் ரம்மியால் இளைஞர்கள், தொழிலாளர்கள் சாகடிக்கப்படுகிறார்கள், தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று தடைச் சட்டம் ஒன்றை இயற்றினால் அந்த அந்த சட்டத்திற்கு அனுமதி கொடுக்காமல் யாரை எதிர்த்து சட்டம் கொண்டு வருகிறார்களோ அந்த முதலாளிகளை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார் ஆளுநர்.

உள்ளபடியே நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது, ஆன்லைன் ரம்மி தடை சட்டம் அந்த விளையாட்டு நிறுவன உரிமையாளர்களுக்கு எதிராக கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால் அந்த சட்டத்திற்கு அனுமதி கொடுக்காமல், அந்த உரிமையாளர்களை அழைத்துப் பேசி விட்டு இந்த சட்டத்திற்கு அனுமதி கொடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்.

போகிற இடங்களில் எல்லாம் அரசியல் பேசுகிற பாங்கை அவர் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்.

அவரை வேண்டுமானால் ஆளுநர் பதவியை விட்டுவிட்டு பாஜகவின் தலைவராக அவர் வந்திருக்கலாம் என்றார் பிரபாகரன்.

(நிறைவு)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.300
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 8973341377

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### 1929 – சுயமரியாதை மாநாடும் தமிழ்நாட்டின் அரசியலும்

# கோவையில் கழகம் நடத்திய எழுச்சிக் கருத்தரங்கு

கோவை மாநகரக் கழகம் ஏற்பாடு செய்த “1929 செங்கல் பட்டு முதல் சுயமரியாதை மாநாடும் தமிழ்நாட்டின் அரசியலும்” கருத்தரங்கம் கோவை அண்ணாமலை அரங்கில் பிப்ரவரி 18, மாலை 5 மணிக்கு தொடங்கி நடைபெற்றது.

நிகழ்விற்கு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் தலைமை வகித்தார், கருத்தரங்கின் முதல் நிகழ்வாக பகுத்தறிவு பாடல்களை கழகத் தோழர்கள் கிருஷ்ணன், புரட்சித் தமிழன், யாழினி, தமிழினி, சுருதி, அம்பிகா, இசைமதி ஆகியோர் பாடினார்கள். சிவராசு வரவேற் புரையாற்றினார்,

அதைத் தொடர்ந்து மாநகரத் தோழர் வெங்கட் , மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் யாழ். வெள்ளிங்கிரி, கழகப் பொரு ளாளர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றப் பொறுப் பாளர் சிவகாமி ஆகியோர் உரையாற்றினர் .

தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி “பெண்களை கைப்பிடித்து அழைத்து வந்த தலைவர் பெரியார்” என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து சிறப்புரையாற்ற வந்த திமுக மாணவரணித் தலைவர் இரா. இராஜிவ் காந்திக்கு ஸ்டாலின் ராஜா ‘அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்’ என்ற நூலை வழங்கினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். மாநகர அமைப்பாளர் நிர்மல் குமார் நன்றியுரை கூற கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

இக்கருத்தரங்கில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா 3ஆவது தவணையாக ரூ.10,000/- கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கழகத் தோழர்கள் இராஜாமணி, பொன்மணி, அமிலா, சூலூர் ராஜி, இராஜ லட்சுமி ஆகியோர் வழங் கினார்கள். இதற்கு முன்பு கோவை மாவட்டக் கழகம் சார்பாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ சந்தா தொகை ரூ.1,03,300/- வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது,



பெரியார் பெருந்தொண்டர் இரும்பொறை சுந்தரமூர்த்தி கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் மாநகர அமைப் பாளர் நிர்மல்குமார் ஆகி யோருக்கு பயனாடை போர்த்தி பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

உயிர்காற்று நூல் ஆசிரியர் கொடுப்பனை நூல் விற்ற தொகையில் ரூ.5000 யை கழக வளர்ச்சி நிதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி யிடம் வழங்கினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கோவை உப்பிலிபாளையம் பகுதியைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். தோழருக்கு சட்ட எரிப்பு போராட்டம் நூல் வழங்கி கழகத் தலைவர் வரவேற்றார்.

மேலும் கருத்தரங்கில் கொடி யேந்தி நன்கொடை வசூலிக் கப்பட்டதில் ரூ.2995 திரட்டப் பட்டது, இக்கருத்தரங்கத்திற்கு கழகத் தோழர்கள், ஆதர வாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திட கழகத் தோழர்கள் பல்வேறு பகுதிகளில் இருக்கக் கூடிய கழக ஆதரவாளர்கள், வழக்கறிஞர்களை சந்தித்து துண்டறிக்கை வழங்கி கருத்தரங்கத்திற்கு வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படைக் கடமை கூறுகிறது.

பூமியை விஷத்தில் இருந்து காப்பாற்றினான் சிவபெருமான் என்று சொன்னால், துருக்கியில் பூகம்பம் ஏற்பட்டு நாற்பத்தி ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகி விட்டன; உலகில் பூமி வெப்பம் ஆகிறது; இதனால் பெரும் ஆபத்தை உலகம் சந்திக்க நேரிடும் என்று உலக நாடுகள் ஒன்று கூடி பூமியை வெப்பத்திலிருந்து காப்பாற்றுவது எப்படி என்று மாநாடுகள் நடத்திக்கொண்டு இருக்கின்றன.

அறிவியல் உலகம் பூமியின் வெப்பமாவதையும் பூகம்பத்தையும் தடுப்பது எப்படி என்று விவரித்துக் கொண்டிருக்கிற காலகட்டத்தில் விஷத்திலிருந்து சிவன் பூமியை காப்பாற்றினான் என்று ஒரு விழாவை நடத்திக் கொண்டு அதற்கு அறநிலையத் துறையும் பக்தர்களும் பெரும் பொருட் செலவில் கலை நிகழ்ச்சிகளையும் சடங்குகளையும் கண் விழித்தலையும் மந்திரங்களையும் ஓதிக்கொண்டு இருக்கிறார்கள்.

இது அறிவியலுக்கு உகந்தது தானா?

# சிங்காரவேலர் சிலைக்கு கழக சார்பில் மாலை



சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரின் 164ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சிங்காரவேலர் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு சென்னை மாவட்டக் கழகம் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட கழகச் செயலாளர் இரா. உமாபதி, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, அருண், கிஷோர், மயிலைப் பகுதி கழகத் தலைவர் இராவணன், மனோகர், மக்கள் குடியரசு இயக்கம் ஜான் மண்டேலா, மே 17 இயக்கம் முகிலன், திராவிடர் கழகம் மாரிமுத்து உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

# மாநாட்டு மண்டபத்தை தலைவர் பார்வையிட்டார்



சேலம் மாநாடு நடக்கும் ‘சந்திர மகால்’ மண்டபத்தை கழகத் தலைவர், மாவட்டக் கழகத் தோழர்களுடன் சென்று பார்வையிட்டார். (பிப்.17, 2023)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd February 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN